Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 68/2020**

**Deposition of PW.3 (LW. 3)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மகேந்திரன் | ஜாதி | : | |
| த/பெ | : | ராமசாமி | தொழில் | : | துணை இயக்குநர் |
| கிராமம் | : | கோயம்புத்தூர் | சமயம் | : | |
| தாலுகா | : | கோயம்புத்தூர் | வயது | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.12.2025.

(எதிரிகள் A4, A7 ஆஜர் A1, A2, A3, A5, A9, A10, A11, A14 ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 petition allowed and A6, A8, A12, A13 are died)

**முதல் விசாரணை**

நான் தற்போது கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் மண்டலத்தில் துணை இயக்குநராக தமிழ்நாடு வனம் மற்றும் வன உயிரின குற்ற தடுப்பு பிரிவில் பணி புரிந்து வருகிறேன். நான் கடந்த மே மாதம் 2003 முதல் 2004 ஆம் வருடம் இறுதி வரை பணிபுரிந்த போது கடந்த 27.02.2004 ஆம் தேதி நான் செம்பட்டி பிரிவு வனவராக வேலை பார்த்த போது கன்னிவாடி வனச்சரக அலுவலர் போன் மூலமாக தோணிமலைப்பகுதியில் அனுமதி இல்லாமல் தோதகத்தி மரத்தை சில நபர்கள் வெட்டிக் கொண்டிருப்பதாக தகவல் வந்ததாகவும், அந்த இடத்திற்கு செல்வதற்கு உங்களது பிரிவு அலுவலர்களுடன் கன்னிவாடி வனச்சரக அலுவலகத்திற்கு வரச்சொன்னார்.நான் அன்றைய தினம் நானும், என்னுடன் வேலை பார்த்த திரு. ராஜாராம், வனக்காப்பாளர், சித்தையன்கோட்டை பீட், திரு.முருகையா , வனக்காப்பாளர்,மற்றும் சாமியப்பன் , வனக்காவலர் , பெரியூர் பீட் மற்றும் ஞான பாலமுருகன், வனக்காப்பாளர், செங்கட்டாம்பட்டி பீட் ஆகியோர்களுடன் சென்றேன். நான் அங்கிருந்து பிச்சை என்ற கன்னிவாடி பிரிவு வனவர் தலைமையில் நாங்கள் எல்லோரும் கன்னவாடியிலிருந்து 407 நான்கு சக்கர வாகனத்தில் தருமத்துப்பட்டியிலிருந்து பன்றி மலை சாலையில் தோணிமலைப்பிரிவில் இறங்கி நடைபயணமாக சென்றபோது ராஜாராம் மற்றும் தெய்வேந்திரன் ஆகியோர் வழிநடத்த நாங்கள் சென்றபோது அன்றையதினம் சுமார் 05.00 மணியளவில் ராஜாராம் என்பவரின் பட்டாநிலத்தில் 7 நபர்கள் அங்கிருந்த இயற்கையாக வளர்ந்த தோதகத்தி மரங்களை வெட்டிக் கொண்டிருந்தார்கள். நாங்கள் எல்லோரும் சேர்ந்து அவர்களை பிடித்தோம். அவர்கள் வைத்திருந்த ரம்பம், கோடாரி, அருவாள் ஆகியவற்றை கைப்பற்றினோம். அந்த 7 நபர்களையும் பிடித்து விசாரித்தோம். அதில் நான் முருகேசன் என்பவரை முதலில் மாலை 05.15 மணிக்கு விசாரித்தேன். அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.அதே இடத்தில் வைத்து மலையான் என்பவரை மாலை 05.30 மணிக்கு விசாரித்தேன்.அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதே

இடத்தில் வைத்து அந்த 7 நபர்கள் வெட்டிய 7 வெட்டு மோட்டுகளையும் , 28 சதிரிப்பு கட்டைகளையும், 2 உருட்டு கட்டைகளையும் நான் அளந்தேன். அதை பிச்சை அவர்களிடம் சொல்ல சொல்ல அவர் ஸ்தல மகஜர் தயார் செய்தேன். அந்த ஸ்தல மகஜரில் கையெழுத்து போட்டேன். அந்த ஸ்தல மகஜரில் உள்ள என்னுடைய கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரிகளையும் , எதிரிகள் பயன்படுத்திய கோடாரி, ரம்பம் மற்றும் அரிவாள் ஆகியவற்றை கன்னிவாடி வனச்சரக அலுவலகத்திற்கு கொண்டு வந்தோம். மற்ற எதிரிகளை கன்னிவாடி வனச்சரக அலுவலர் விசாரித்த போது அந்த சம்பவத்தில் வத்தலக்குண்டு அருகில் உள்ள ஜி. தும்மலப்பட்டியை சேர்ந்த சரவணக்குமார் என்பவர் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரியவந்ததால் அன்றைய தினம் நானும், கன்னிவாடி வனச்சரக அலுவலர் தலைமையில் மற்ற அலுவலர்களான முருகையா மற்றும் சாமியப்பன் ஆகியோருடன் சரவணக்குமார் வீட்டிற்கு சென்று அன்று இரவு 11.00 மணிக்கு கைது செய்து நான் விசாரித்தேன். அவர் என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை நான் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவரை கன்னிவாடி வனச்சரக அலுவலகத்திற்கு அழைத்துவந்து பாதுகாப்பாக வைத்தேன். பின்பு மறுநாள் 28.02.2004 அன்று இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட முருகபாண்டியை கன்னிவாடி பிரிவு வனவர் தலைமையில் நானும், கன்னிவாடி பீட்டை சேர்ந்த அலுவலர்களும், அவருடைய வீட்டிற்கு சென்று காலை 08.00 மணிக்கு அவரை கைது செய்து செய்தோம். அவரை கன்னிவாடி வனச்சரக அலுவலகத்திற்கு அழைத்து வந்து மதியம் 02.00 மணிக்கு நான் அவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றேன். அந்த ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு என்னுடன் வேலை பார்த்த அலுவலர்களை எதிரிகளின் பாதுகாப்பிற்கு விட்டு விட்டு நான் மட்டும் எனது அலுவலகத்திற்கு வந்து விட்டேன்.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor